**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**<u>O.S. 47/2020</u>**

**வா.சா.1**

**பெயர். செல்வி, க/பெ. மோகன்**

**<u>1முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

என் தகப்பனார் கோபால் சேர்த்து காசிநாதன், முருகையன், தியாகராஜன் மற்றும் ராமன் ஆகியோருக்கு எதிராக இந்த பிரதிவாதிகளால் தொடரப்பட்ட மேல் முறையீட்டில் இந்த பிரதிவாதிகளுக்கு சாதகமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் உள்ள காசிநாதன், முருகையன், தியாகராஜன் மற்றும் ராமன் ஆகியோர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அவர்கள் எனக்கு பிரச்சினை தரவில்லை. தாவா சொத்தின் அனுபவம் இந்த பிரதிவாதிகள் தரப்பிடம் உள்ளதாக குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 145/1 ன் கீழ் திருவாரூர் வட்டாச்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது குறித்து தெரியுமா என்றால் தெரியாது நாங்கள் விசாரிக்கப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 3, 4 ,5 , 7 , 8 , 9 மற்றும் 10 ஆகியவற்றில் தாவா சொத்து புலஎண் குறித்து குறிப்பிடவில்லை என்றாலும் அவைகள் தாவா சொத்துக்குரியவை அல்ல என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக எதிரிடை பாத்தியம் கோருகிரேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு எதிரிடை அனுபவம் கோரியுள்ள நிலையில் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எப்போது தாவா சொத்தில் உள்ள எனது

அனுபவத்தில் குறுக்கீடு செய்தார்கள் என்றால் நான் 2020 ம் ஆண்டு மார்ச் மாதம் வீடு கட்டியபோது பிரச்சனை செய்தார்கள். குறிப்பிட்டு தேதி கூறப்படவில்லை என்றால் சரிதான். இந்த தாவாவிற்கு வழக்கு மூலமே கிடையாது என்றாலும் தாவா தள்ளுபடி செய்யவேண்டுமென்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.11.04 18:04:42 +0530